# வழிநடத்துகிறீர்களா அல்லது மேலாண்மை செய்கிறீர்களா?

# (Lead or Manage)

பெற்றோர் என்ற முறையில், நம் குழந்தைகளை வழிநடத்தி, அவர்களின் நடவடிக்கைகளை மேலாண்மையும் *(Manage)* செய்கிறோம். (மேலாண்மை செய்வதென்றால், என்ன இது..! நிறுவனமா அல்லது குழந்தையா? மேலாண்மை செய்வதற்கு? என்று நீங்கள் சற்று நகைச்சுவையாகவும் நினைக்கலாம். மேலாண்மை செய்வது என்பதற்கு அர்த்தங்கள் பலவிதம். செயல்பாடுகளை நெறிமுறைப்படுத்தி, அதை திட்டமிட்ட முறையில் கட்டுக்கோப்பாக கொண்டுசெல்வதே மேலாண்மை. அந்த வகையில், அவ்வார்த்தை எங்கு வேண்டுமானாலும் பயன்படும்). போதுமான மேலாண்மை திறன்களின்றி குழந்தையை வழிநடத்துகையில், நமக்குப் பல்வேறான சிக்கல்கள் எழுகின்றன. ஒரு தெளிவான தலைமைத்துவப் பண்பின்றி நாம் மேலாண்மை செய்தால், நம் இலக்கை அடைய நீண்டகாலம் எடுத்துக்கொள்ள நேரிடும்.

தலைமைத்துவம் என்பது மக்கள் மேம்பாடு, முன்னேற்றம், சரியான செயல்களை மேற்கொள்ளுதல், வழிகாட்டுதல் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதேவேளையில், மேலாண்மை(நிர்வாகம்) என்ற அம்சமோ, பல்வேறு செயல்பாடுகளை சிரமேற்கொண்டு நடத்துதல், கட்டுப்பாடு, சரியான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வேகம் மற்றும் பயிற்சிகள் ஆகிய அம்சங்களின்பால் அக்கறை கொள்கிறது. தலைமைத்துவம் மற்றும் மேலாண்மை ஆகிய இரண்டிற்குமான வெளிப்படையான வித்தியாசங்கள் இவைதான்.

தவறான முறையில் நாம் வழிநடத்துவதால், இந்த செயல்பாடு எப்படி நிர்வகிக்கப்படுகிறது என்ற ஒரு கேள்வி அங்கே எழுகிறதா? மாறாக, நமது மேலாண்மைத் திறனால் சரியான முறையில் செயல்பாடுகளை மேற்கொள்ள முடியாதபோது, குறைவான வேகம் மற்றும் விநியோக அறிவினால், பலன்கள் மற்றும் பயிற்சிகளை கட்டுப்படுத்துவது, ஒரு சிறந்த தலைமையா?

வழிநடத்துதல் என்பது ஒரு கலை. மேலாண்மை என்பது திறன்கள் மற்றும் அமைப்புமுறை பற்றியது. பெற்றோர் செயலாக்கம் என்பது எப்போது வழிகாட்டுவது மற்றும் எப்போது மேற்பார்வையிடுவது என்பதை அறிவதன் ஒரு நுட்பமான சமன்பாடேயாகும்.

திரு.வித்தகன் என்பவர் ஒரு நேர மேலாண்மை ஆசிரியர். அவர் எங்கே சென்றாலும் சரி அல்லது எதை செய்தாலும் சரி, தன்னுடைய தினசரி திட்டமிடுநரை(Daily Planner) ஆலோசிக்காமல் எதிலும் ஈடுபடமாட்டார். எனவே, திரு.வித்தகனுக்கு புதிய திறன்களை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு, தினசரி நேரம் ஒதுக்குவது இயல்பாகவே அமைந்தது. காலையில் 5 மணிமுதல் 6 மணிவரை, அவர் உடற்பயிற்சி செய்துகொண்டே, ஃபிரெஞ்சு மொழி கற்பதற்கான ஒலிநாடாவை ஓடவிடும் திட்டம் வகுக்கப்பட்டது. மாலை 7.30 மணிமுதல் 8.00 மணிக்குள் இரவு உணவு இடம்பெறும். இரவு உணவை முடித்தப் பின்னர், ஒவ்வொரு 15 நிமிடமும் அவரது நேர திட்டமிடுநரில் ஒதுக்கப்பட்டிருக்கும். அதில், அவருடைய குழந்தைகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதலும் அடக்கம். தபேலா பயிற்சி, புத்தகங்கள் படித்தல், யோகா பயிற்சி, குளியல் நேரம், பல் துலக்குதல் மற்றும் பிரார்த்தனை செய்தல் உள்ளிட்டவையெல்லாம் நேர திட்டமிடுநரில் அடக்கம். அவர், ஒரு நாளின் ஒவ்வொரு நொடியையும் திட்டமிட்டு வைக்கிறார். தனது மனைவியின் செயல்பாடுகளையும்கூட அவர் திட்டமிடுகிறார். அவருடைய குழந்தைகள் ஈடுபடும் நடவடிக்கைகளும் புத்தகத்தில் உள்ளன. தன் குடும்பத்தில், திட்டமிடப்பட்ட அனைத்தும் முடிந்துவிட்டன என்று வியப்பு மேம்பட கூறுகிறார். ஏனெனில், தினசரி திட்டமிடுநர், ஒவ்வொன்றையும் ஒருங்கிணைக்கிறது.

ஆனால், நாட்கள் செல்ல செல்ல திரு.வித்தகனின் குழந்தைகள் இப்போது சற்று வளர்ந்துவிட்டனர். அவர்கள், வளர்ந்த குழந்தைகளின் சுயசார்பு நிலையை அடைந்ததால், அந்த 6 வயது காலகட்டத்தில், குழந்தைகளின் நடத்தையில் சிறிய அளவிலான எதிர்ப்புகள் மற்றும் சில ஏமாற்று நடவடிக்கைகள் தென்படும். உதாரணமாக, ஓவியப் பயிற்சி வகுப்பிற்கு செல்வதை தவிர்க்கும் பொருட்டு, சாப்பிட்ட இடத்திலிருந்து சரியான நேரத்தில் எழாமல், தட்டிலிருக்கும் சிறிதளவு உணவை நீண்டநேரம் உண்டு கொண்டிருப்பார்கள். தாங்கள் படிக்க வேண்டிய புத்தகத்தை வேண்டுமென்றே எங்கேனும் மறைத்து வைத்து விடுவார்கள். குளிக்க வேண்டிய நேரத்தில், தனது சிறிய சைக்கிளை துடைத்துக் கொண்டிருக்கலாம். சற்று

வளர்ந்த அவரது குழந்தைகளின், மேலே குறிப்பிட்டதைப் போன்ற தந்திர மற்றும் எதிர்ப்பு செயல்கள், வித்தகனின் நேர திட்டமிடுநரை வெகுவாக பாதித்தது.

இங்கே திரு.வித்தகன் ஒரு முக்கிய தவறை செய்தார். அதாவது, அவரின் குழந்தைகள் தொலைநோக்குப் பார்வை, நீதிநெறி வழிகாட்டல் மற்றும் சுயமேம்பாடு போன்ற காரணங்களுக்காக அவரின் தலைமைத்துவத்தை நாடியபோது, அவரோ தனது குழந்தைகளை 'மேலாண்மை' செய்துகொண்டிருந்தார். திரு.வித்தகனைப் பொறுத்தவரை, தலைமைத்துவம் மற்றும் மேலாண்மை ஆகிவற்றுக்கிடையிலான சமன்பாடு, நேரத் திட்டமிடலில் கவனம் செலுத்துதல், நேரத்தையும் பயிற்சிகளையும் கட்டுப்படுத்தி திறனுடன் விளங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியதால் சிதைந்துவிட்டது.

பிறர், தங்களைத் தாங்களே நிர்வகித்து, கட்டுப்படுத்திக்கொள்ளும் வகையில் அவர்களை மேம்பாடு அடையச் செய்வதற்கு பதிலாக, அவர்களின் மீது கட்டுப்பாட்டை செலுத்துவதிலேயே நாம் அதிக அக்கறை காட்டுகையில், நம்மைச் சுற்றி நம்பிக்கையின்மை அல்லது நம்பிக்கை குறைவு எனும் மேகம் படர்ந்திருப்பதை நாம் கண்டறியலாம். தப்பித்துக்கொள்ளும் மனப்பான்மை, கோபம், பயம், குழப்பம், மனச்சண்டை, புறங்கூறுதல், மறைமுக திட்டமிடல்கள், தகவல்களை வெளியிடாமை, செரிவற்ற நடத்தை மற்றும் ஒன்றை சொல்லிவிட்டு இன்னொன்றை செய்தல் போன்றவைதான் அந்த நம்பிக்கைக் குறைவின் அடையாளங்கள்.

**சிறந்த முறையில் மேலாண்மை செய்ய வேண்டுமானால், நாம் வழிநடத்த வேண்டும். நல்லமுறையில் வழிநடத்த வேண்டுமானால், சிறந்த முறையில் மேலாண்மை செய்ய வேண்டும். எனவே, இதோ நாட்டியம் தொடங்குகிறது.**

பெற்றோர்களாகவும் மற்றும் ஆசிரியர்களாகவும் நமது பணி என்னவென்றால், நமது குழந்தைகளுக்கு எவ்வாறு உதவிசெய்து, அவர்களை வழிநடத்தி மேலாண்மை செய்யப்போகிறோம் என்பது குறித்து ஒரு தெளிவானப் புரிதலை வைத்திருப்பதுதான். இதனால், நம் குழந்தைகள் பிற்காலத்தில், பிறரை வழிநடத்தி மேலாண்மை செய்வார்கள்.

*இல்லையெனில், நாம் நினைக்காத ஒரு நிலைக்கு நாம் செல்ல நேரிடலாம்..!*

***************

*மூல ஆங்கிலக் கட்டுரை:* ***Maren Schmidt (மாண்டிசோரி ஆய்வாளர்)***

*தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)*

*மேலதிக விபரங்களுக்கு: www.relieffoundation.in*